# தெள்நீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து

**முனைவர் ந.குப்புசாமி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,**
**திருவண்ணாமலை. kuppusamyezhil@gmail.com**

3

**ஆய்வுச் சுருக்கம்**

பேரரசுகள் உருவாக்கத்திற்கு முன்பே தமிழ்நாடு நிர்வாகத்திறன் மிக்க கோட்டங்களாகவும் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டை நாட்டினை ஆதொண்டைச் சக்கரவர்த்தி வழிவந்த மறவர்கள் சிறப்பாக ஆண்டு வந்தனர். தமிழர் தொல்குடிகள் பேரரசு உருவாக்கத்தினால் நலிவுற்றன. பழந்தமிழ்க் குடிவரலாறு மீட்டெடுப்பு செய்வது காலத்தின் இன்றியமையாதப் பணியாகும். தமிழர்களின் வரலாறு அறிதலே ஆளுமைத்திறனை உணரச் செய்யும் உத்தியாகும். ஒற்றுமையயை வளர்தெடுக்கவும், அந்நிய சக்திகளிடம் இருந்தும், பொருளாதார சுரண்டலில் இருந்தும் தமிழகம் தலைநிமிர தொல்குடி வரலாறு ஆராய்ந்து எழுதப்பட வேண்டும். அதிகமான்கள், மலையமான்கள், கோசர்கள் வரிசையில் தொண்டையர் வரலாறு அறிவது ஆய்வின் பயனாகவும் அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

1. பினாகினி நதி – பெண்ணாறு, பெண்ணையாறு
2. பவளமலை - ஈரோடு மாவட்டம் முத்துக்குமாரசாமி கோயில் முருகன் மலை.
3. தொறுபூசல் - ஆநிரை பொருட்டு நடைபெற்ற போர்
4. பவத்திரி – என்பது அழகுமிகுந்த நகரம் முற்காலச் சோழர்களின் தலைநகரம் (பழவேற்காடு ஏரி)
5. சான்றோர் - பண்புகளால் மேம்பட்டவர் / பெருவீரம் மிக்கவர்
6. நன்னாடு – காவல் மிகுந்த / நாடு வளமான நாடு
7. தெள்நீர் - தூர்மையான நீர் / தென்பெண்ணையாற்று நீர்

## தெள்நீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து

### முன்னுரை

பழந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டியர் என்கிற மூவேந்தர்கள் ஆளுகைக்கு முன்பிருந்தே கட்டுக்கோப்பான ஆட்சி, நிர்வாகத்திறன் கொண்ட நாடாக இருந்துள்ளது. நாடோடி வாழ்க்கை முடிவுற்ற பிறகு இனக்குழு மரபுகள் தோன்றின. இனக்குழுவில் இருந்தே அரசுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. அரசுகள் தோன்றுவதற்கு முன்பிருந்த இனக்குழுக்கள் பல்வேறு அடையாளங்களைத் தங்களுக்கான வாழ்வியல் கூறுகளில் ஒன்றிணைத்து வாழ்ந்ததை உலகின் பல பழங்குடிகளிடமிருந்து இன்

றும் நாம் அறிகிறோம். தமிழகத் தொல் குடிகள் பல மூவேந்தர்களோடு நட்பு பாராட்டியும், பகைகொண்டும் தங்களுக்கான அரசியல் அதிகார பலமிழந்து போனதை இலக்கியங்கள், கல்வெட்டுகள், போன்ற எழுத்து ஆவணங்களின் மூலமும், வாழ்வியல் கூறுகள் போன்ற இயங்கியல் மூலமும் அறியலாம். அவ்வரிசையில் அதிகமான்கள் மலையமான்கள், கோசர்கள், குறும்பர்கள், தொண்டையர்கள் என்று பழந்தமிழ் குடிகள் போர்குடிகளாக இருந்து வாழ்வியல் மாற்றத்தில் உழுகுடிகளாக, ஆயர்களாக, கைவினைக் கலைஞர்களாக, இசைவாணர்களாக மாறி தமிழின் பழமரபைக் காத்து வருகின்றனர். அவர்களின் பூர்வீகம் யாது என்பது பலரும் அறியாது வாழ்வியல் ஓட்டத்தில் உள்ளனர். இருப்பினும் அவ்வப்போது சில ஆய்வறிஞர்கள் சில குடிகளின் வரலாறுகளை சிறு சிறு நூல்களாக வெளியிட்டும் உள்ளனர். புலவர் கா. கோவிந்தன் கோசர்கள் குறித்து ஒரு நூல் எழுதியுள்ளார்கள். மலையமான்கள், அதிகமான்கள் குறித்தும் ஆங்காங்கே சில ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் வட தமிழகத்தின் பூர்வீகக் குடிகளான தொண்டையர்கள் அல்லது தொண்டைமான்கள் குறித்து அறிதாகவே ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் கிடைக்கின்றன. அக்குறையை நீக்கும் விதமாக எழுந்த சிறு முயற்சியே இக்கட்டுரை.

**தொண்டை நாடு**

காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு திரையர் பரம்பரையினர் முன்பொரு காலத்தில் இங்கு ஆட்சி செலுத்தியுள்ளனர். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி இன்று வட தமிழகம் என்றும் பண்டு தொண்டை நாடு என்றும் அழைக்கப்பட்டது. தொண்டை நாட்டின் பரந்த நிலப்பரப்பை விவரிக்கும் அபிதான சிந்தாமணி “மேற்கில் பவள மலையினையும், கிழக்குக் கடலையும், தெற்குப் பினாகினி நதியையும், வடக்குத் திருவேங்கடத்தையும் எல்லையாகக் கொண்ட நாடு”[1] என்று வரையறை செய்கிறது.

“தென்பாண்டி, குட்டம், குடம், கற்காவேண் பூமி,
பன்றி, அருவா, அதன்வடக்கு – நன்றாய
சீதம், மலாடு, புன்னாடு, செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட் டெண்.”[2]

என்ற பழந்தமிழ் செய்யுள் வழி தமிழகத்தின் பழைய நிர்வாக நாட்டெல்லைகளை அறிய முடிகிறது. மேற்கண்ட பன்னிரு நிலத்தும் மக்கள் வாழ்ந்ததும், அவர்கள் பழந் தமிழ் குடிகளாக தங்களுக்குள் தனித்த அடையாளத்தையும் கொண்டிருந்தனர் என்பது நிதர்சனம். மேற்காண் பன்னிரு நாட்டினுள் அருவா, அருவா வடதலை என்கிற இரண்டு நாடுகளும் ஒன்றிணைந்ததே தொண்டை நாடு என்பதை புலவர் க. கோவிந்தன், பொ. வெ. சோமசுந்தரனார், மா. இராசமாணிக்கனார் போன்றோர் தம் ஆய்வுகளில் பதிவு செய்துள்ளனர்.

தொண்டை மண்டலம் தொடக்கக் காலத்தில் குறும்பர் வாழும் பகுதியாக இருந்தது என்று மா. இராசமாணிக்கனார் கூறுவது பொருந்துமாறு இல்லை. ஏனெனில் இனக்குழு உருவாக்கத்திற்கு முன்பிருந்தே இப்பகுதியில் மனித சமூகம் வாழ்ந்ததற்கு அடையாளமாக, கல்திட்டைகள் (அம்மாப்பாளையம்) எடுத்து வச்சான் கல், (செஞ்சி மலை) தாய்த்தெய்வ சிலை (தானிப்பாடி) போன்ற

ஆதா

ரங்கள் கிடைக்கின்றன. சவ்வாது மலையில் சில இடத்து கிடைக்கும் குள்ளர் வீடுகள் போன்றன குறிப்பிட்ட ஒரு குறும்பர் இனத்தைக் குறிப்பன அல்ல. தரைவழிக் காடுகள் நிறைந்த இப்பகுதி மேய்ச்சல் நிலமாக இருந்துள்ளன. இப்பகுதியில் இன்றுவரை பால் உற்பத்தி ஒரு முதன்மையான வாழ்வியல் தொழில் இங்கு வாழும் எவருமே இதனைச் செய்கின்றனர். அதுமட்டுமின்றி ஆநிரை பெரும் செல்வமாகக் கருதப்பட்டு அவற்றின் வழி நடை பெற்ற போர்களும் இங்கு ஏராளம் (காண்க. இரா. பூங்குன்றன் செங்கம் நடுகற்களில் தொறுபூசல்). எனவே நிரை மேய்த்தல் என்ற ஒரு காரணம் பற்றி குறிப்பிட்ட இனத்தார் இங்கு வாழ்ந்தனர். அவர்களை வென்று இளந்திரையன் இந்நாட்டை மீட்டான் என்பது ஆதாரமற்றது.

சோழர் பரம்பரையில் வந்தவனும், இலக்கியங்களில் ஆதொண்டைச் சக்கரவர்த்தி என்று குறிப்பிடப்படுபவனுமான தொண்டைமான் இளந்திரையன் தொண்டை மண்டலத்தை வலிமைபடுத்தினான் என்று பல்வேறு இலக்கிய ஆதாரங்கள் கூறுகின்றன. (புறநானூறு, பெரும்பாணாற்றுப்படை, மணிமேகலை) அதுபோலவே தொண்டை வளநாடு சான்றோர்கள் நிறைந்த பகுதி என்றும் அது எப்போது கோட்டங்களாகப் பகுக்கப்பட்டது என்பதற்கான குறிப்புகள் கிடைக்கவில்லை. சான்றோர்கள் என்பதற்கான விளக்கமும் இவண் ஆராய வேண்டியுள்ளது. அதற்கு முன்பாக தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாக இருந்ததை தொண்டை மண்டல சதகம் குறிப்பிடுகின்றது. அவற்றோடு கா. அப்பாதுரை அவர்கள் தொண்டைமண்டல பட்டயம் எனும் மூலத்திலிருந்து கோட்டங்களையும், நாடுகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

“1. புழல் கோட்டடம் 2. புலியூர் கோட்டம் 3. ஈக்காடு 4. மணவூர் கோட்டம் 5. செங்காட்டுக் கோட்டம் 6. பையூர் கோட்டம் 7. எயில் கோட்டம் 8. நாகூல் கோட்டம் 9. ஊத்துக்காட்டுக் கோட்டம் 10. களத்தூர்க் கோட்டம் 11. செம்பூர் கோட்டம் 12. ஆமூர் கோட்டம் 13. ஈத்தூர் கோட்டம் 14. வென்குன்றக் கோட்டம் 15. பல்குன்றக் கோட்டம் 16. இளங்காட்டுக் கோட்டம் 17. கலியூர் கோட்டம் 18. சிறுகரை கோட்டம் 19. படுவூர் கோட்டம் 20. கடிகை கோட்டம் 21. செந்திருகை கோட்டம் 22. குன்றப் பட்டிரக் கோட்டம் 23. வேங்கடக் கோட்டம் 24. வேலூர் கோட்டம்”[3] ஆகியவை ஆகும்.

தொண்டை மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டங்களைக் காலந்தோறும் பல்வேறு இனக்குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், மன்னர்கள், தளவாய்கள், அதிகாரிகள் என ஆண்டு வருகின்றனர். அவர்களுள் தொண்டைமான் இளந்திரையன், நல்லியக்கோடன், நன்னன் சேய் நன்னன் ஆகியோர் பாணர்களாலும், புலவர்களாலும் பாராட்டப்பட்டுள்ளனர். அப்புலவர்களின் பனுவல்கள் வழி தொண்டை மண்டல வரலாறு ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது.

**இளந்திரையனின் கொடை குணம்**

தொண்டை நாட்டை ஆண்ட திரையன் இவ்வுலகின்கண் வாழும் குடிகளெல்லாம் நன்கு வாழ வேண்டும் என்னும் விருப்பமுடையவன் தன்னை நாடி வருவோர்க்குப் பல்வேறு உதவிகளைச் செய்வதோடு அவர்களின் மகிச்சியிலும் பங்கு கொள்பவன். ‘ஆள்பாதி ஆடைபாதி’ என்ற பழமொழிக்கு ஏற்ப, தன்னைச் சந்தித்து வறுமையைப் போக்கிக் கொள்ளக் கருதும் பாணனுக்கு ஆடை வழங்கி வேற்றுமை தோன்றாது அவையில் தோன்றச் செய்வான். தன் அரசவைச் சுற்றத்தோடு நீயும் உன்

சுற்றமும் வேற்றுமையின்றித் தோன்றும்படிச் செய்து உடலுக்குப் பொருந்துமாறு பாலாவியை ஒத்த நூலால் செய்த ஆடையை உடுக்கச் செய்வான். மேலும், சமையல் கலையில் வல்லவன் சமைத்த இறைச்சியில் செழித்த தசைகளுடன் செந்நெல்லினுடைய அரிசியாலான உணவு வகைகளும் பிறவும் ஆகிய கண்டோர் விரும்பும்படியான உணவினை விண்மீன் போன்ற வெள்ளிக் கலங்களில் பரப்பி தாய் பிள்ளையைப் பார்ப்பதுபோல முகமலர்ந்து இனிமையாக உபசரித்து தானே முன்னின்று விருப்புடன் உண்ணச் செய்வான்.

“மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து

ஆனா விருப்பிற் றானின் நூட்டி”[4]

வீரம், கொடை, நாடாளும் தன்மையென அனைத்திலும் சிறந்து விளங்கியவன் திரையன். அவன் பரந்த நிலப்பரப்பை ஆண்டுள்ளான்.

“திரையன் எனப்பட்ட தொண்டையர்க்கு வேங்கடமலை உரியது. அவர்கள் வேர்படை உடையவர்கள், தேர்களையும் உடையவர்கள், போர்ப்பயிற்சி மிக்கவர்கள். அவர்கள் நாட்டில் பவத்திரி என்பது சிறந்த நகரம். தொண்டையர்கள் அழியாத புகழை உடையவர்கள். பொன்னணிகளை அணிந்தவர்கள். திரையனின் உரிமையான மலையில் இனிய தாளத்திற்கேற்பக் கின்னரப்பறவை பாடிக்கொண்டிருக்கும். தெய்வங்கள் சாரலில் உரையும்.”[5] இப்படியான வளமிகுந்த நாடாகத் தொண்டை நாடு இருந்துள்ளது என்பது இலக்கியங்கள் தரும் சான்றாகும். அவற்றோடு கல்வெட்டுச் செய்திகளும் தொண்டைநாட்டைப் பெருமையாகவே பதிவு செய்திருக்கின்றன. சான்றாக,

திருவண்ணாமலை மாவட்டத் தடயங்கள் என்னும் நூலில் கோ. உத்திராடம் அவர்கள் குறிப்பிட்டுள்ள செய்தி வருமாறு. “தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் திருச்சோற்றுத்துறை ஓதவைனேசுவரர் கோயில் வடக்குச் சுவற்றில் 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டில், கோவில் திருமுழுக்காட்டு மண்டபம் இடிந்து விழ அதனைத் தொண்டை மண்டலமான ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில், பல்குன்றக் கோட்டத்தில் முருகமங்கலம், பூண்டி ஏனாதி மங்கலத்தைச் சார்ந்த செம்பி நாதன் புதுப்பித்துத் தந்ததை இடம்பெற்றுள்ளது.”[6]

மேற்கண்ட கல்வெட்டுச் செய்தி இரண்டு வரலாற்று உண்மைகளை நமக்கு அறிவிக்கின்றது. முதலாவது தொண்டை நாடு பிற்காலத்தில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என மருவிற்று. இரண்டாவது தொண்டை நாடு காலந்தோறும் வள்ளல் தன்மையோடும், வளமோடும் தொடர்ந்து நீடித்தே வந்தது. தொண்டையர்கள் பிற்காலத்துப் பல்லவர்களோடும், சோழர்களோடும் மணஉறவும் நட்பும் கொண்டு இருந்ததை வரலாற்றில் அறிய முடிகிறது.

தொண்டையர் என்ற தமிழ்க்குடி போர்க்குடி மறவர்களாக இருந்து ஆட்சி நிர்வாகத் திறனில் சிறந்து விளங்கியிருந்தனர். சோரர, சோழ, பாண்டியர் என்ற பேரரசுகள் உருவானதில் தொல்குடிகள் பலமிழந்து போயினர். பேரரசுகளிடம் படை மறவர்களாக, வரி செலுத்துவோராக நிலைதாழ்ந்து இருந்த நிலையில் வேற்றவர் ஆட்சி இந்த மண்ணில் உருவானது அது ஹரிகர்ர புக்கர் வழி புகுந்தபோது படைவீடு அவர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது. பிறகு சூழ்ச்சியால் படைவீட்டை வென்

றனர். சம்புவராயர்களின் வீழ்ச்சியால்தான் தமிழ்நாட்டில் அந்நியர் ஆட்சி சிறிது சிறிதாக வளர்ந்து தமிழ் மக்கள் இன்று தங்கள் உரிமைகளை, உடைமைகளை இழந்து மீண்டும் பழைய நாடோடி வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**சான்றோர் என்ற சொல் காலந்தோறும் உணர்த்தும் பொருள்**

சான்றோர் எனும் சொல்லிற்குப் பொதுவாக உலகியலில் பெரியோர் என்ற கருத்தாக்கம் உள்ளது. பெரியோர் என்றால் வயது, அறிவு, குணம், நடத்தை, எண்ணம், சொல், செயல் என்று பல்லாற்றானும் மேம்பட்ட ஒருவரைக் குறிப்பதே! பெரியோர் என்ற வழக்கு சொல்லாகும்.

சான்றோர் என்ற சொல்லிற்கு அகராதி தரும் விளக்கம். "அறிவொழுக்கங்களால் நிறைந்தோர்."[7] திருக்குறளில் சான்றாண்மை என்ற ஓர் அதிகாரம் வகுக்கப்பட்டுள்ளது இங்கு நினைவு கூறத்தக்கது.

"குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூம் அன்று"[8]

சான்றோருக்கு இருக்க வேண்டிய எல்லாவற்றிலும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுவது பண்பு நலன் என்கிறது. மக்கட்பேறு அதிகாரத்தில் குறிப்பிடும் போது ஒரு தாய் தன் மகனைப் பெற்ற போது அடையும் மகிழ்வை விட அவனைக் கற்றறிந்த பெரியவர்கள் அவனை நற்பண்புகளால் மேம்பட்டவன் எனக் கூறும் போது பெரிதும் மகிழ்ந்ததாகத் தெரிகிறது.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."[9]

திருக்குறள் காலத்தில் சான்றோன் என்ற சொல் நற்பண்புகளும் கல்வி அறிவும் மேம்பட்ட ஒருவரைக் குறித்தது. ஆனால், புறநானூற்றுக் காலத்து அச்சொல் வேறோர் பொருளை வழங்கியுள்ளதைப் பொன்முடியார் பாடல் வழி அறிய முடிகிறது.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேள்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."[10]

புறநானூறு குறிப்பிடும் சான்றோன் பெருவீரம் மிக்கோனே! களத்திலே நின்று யானையோடு போர் செய்யும் ஆற்றல் கொண்டவனே சான்றோன் எனக் குறிப்பிடுகிறது. ஆதலால், தமிழ் மொழியில் ஒரே சொல்லிற்குக் காலந்தோறும் பொருள்மாறுபாடு தோன்றுவது இயல்பு. செலவு என்ற சொல் பயணம் என்ற பொருளில் ஆளப்பட்டதைப் போல சான்றோன் என்ற சொல் பெருவீரன் என்ற பொருளிலேதான் தொண்டை மண்டலத்தில் ஆளப்பட்டிருக்கக் கூடும்.

தொண்டை மண்டலம் செங்கம் பகுதியில் ஏராளமான நடுகற்கள் காணக் கிடைக்கின்றன. இந்நடுகற்கள் ஆநிரைப் போரின் காரணமாக எடுப்பித்தவை (ந. குப்புசாமி, செங்கம் வட்

டார வேடியப்பன் வழிபாடு) என்பது ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது. ஆதலால் ஔவையாரின் தனிப்பாடல் வழி அறியப்படும் பாடலின் பொருளாக தூய்மையான தெண்பெண்ணை ஆற்று நீர் பாய்ந்து வளம் கொழிக்கும் வயல் சூழ்ந்துள்ள பழமையான தொண்டை மண்டலத்து வயல்களில் வீரர்களின் நடுகற்களும், அவர்களின் எழுதப்பட்ட புகழும் என்றும் நிறைந்திருக்கும் புகழ்மிக்க நாடு என்று பெருமைபட பாடப்பட்டது உணரப்படுகிறது. இதன் வழி தொண்டை நாடு வழிவழி வளமும் வீரமும் செறிந்தது என்பது பெறப்படுகிறது.

"வேழ முடைத்து மலைநாடு தேக்க
சோழ வளநாடு சோறுடைத்து – பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெள்நீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து."[11]

**முடிவுரை**

தமிழர்கள் அறிவினில் மேம்பட்டவர்கள். உலகில் மாந்தர்கள் மொழியைப் பயன்படுத்தும் முன்பே இவர்கள் மொழியைக் கண்ணியத்தோடு பயன்படுத்தக் கற்றிருந்தனர். அறிவினில் மேலோங்கிய தமிழ்க்குடிகள் வாழும் இடத்திற்கேற்ப ஒழுக்கங்களை வகுத்துக் கொண்டனர். ஒழுக்கத்தின் கூறாகவே கல்வி, வீரம், கொடை, இல்லறம், விருந்தோம்பல், ஆட்சி, நிர்வாகம் போன்றன பார்க்கப்பட்டது. அவ்வரிசையில் தமிழக வரலாற்றில் பேரரசுகளுக்கு முன்பே கோசகர்கள், குறும்பர்கள், அதியமான்கள், தொண்டையர்கள் போன்ற பழந்தமிழ்க் குடிகள் இங்கு கோட்டங்களை, நாடுகளை வகைப்படுத்தி ஆண்டு வந்தனர். அரசுகளே தொல்குடிகளை நலிவுபடுத்தின. தொல்குடிகளின் வீழ்ச்சிதான் தமிழக வரலாற்றில் துரதிஷ்டவசமானது. தொண்டையர் என்கிற திரையன் வழிவந்த மரபினர் வடதமிழகத்தை வளம்பெறச் செய்தனர். பரந்துபட்ட நிலப்பரப்பை ஆண்டு வந்தனர். முற்காலச் சோழர்களோடு தொடர்புற்றிருந்த தொண்டையர்களுக்குப் பிறகு வடதமிழகத்தில் சம்புவராயர்கள் சிறப்பாக ஆண்டனர். விஜயநகரப் பேரரசு நயவஞ்சகமாக சம்புவராயர்களை வீழ்த்தியதால் அந்நியர் ஆதிக்கத்தில் தமிழகமே இன்று வரை திண்டாடுகிறது. அதன் தொடர்ச்சியாகவே போர்க்குடி மறவர்களான தமிழர்கள் இன்று தங்கள் உடைமைகளை இழந்து புலம் பெயர்ந்து பெரு நகரங்களில் கூலிகளாக அலைகின்றனர். மொழி, வரலாறு மறந்த ஒரு இனமாக தமிழர் குடிகள் மாறி வரும் அவலம் நிகழ்ந்து விட்டது. இந்நிலை மாற தொல்குடிகளின் வரலாற்றை அறிந்து தங்களை உணர்வதும் ஒன்றுபடுவதும் அவசியமாகிறது.

**அடிக்குறிப்பு (அ) சான்றெண் விளக்கம்**

1. சிங்காரவேலு முதலியார். ஆ - அபிதான சிந்தாமணி
சீதை பதிப்பகம்
சென்னை – 4 (ஜீன் - 2009)

2. சுந்தரசண்முகனார் - கெடிலக்கரை நாகரிகம் - ப. 133
மெய்யப்பன் பதிப்பகம். (2001)

சிதம்பரம் - 608 001.

3. அப்பாதுரை.கா - 1800 ஆண்டுகட்டு முற்பட்ட தமிழகம். பக் 43-44 ஸ்ரீ செண்பகா பதிப்பகம். (2015)

4. கு.வெ. பாலசுப்பிரமணியம் - புறநாநூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் அவுஸ். (2007)

5. இராசமாணிக்கனார்.மா - பத்துப்பாட்டு ஆராய்ச்சி – ப. 129 சென்னைப் பல்கலைக்கழகம். (2003)

6. விஜய வேணு கோபால்.கோ – ஆவணம் - ப - 18, பக் - 154 தொல்லியல் கழகம் தஞ்சாவூர். (2017)

7. வெற்றி தமிழ் அகராதி - நியூ செஞ்சுரி புக் அவுஸ் (2016)

8. திருக்குறள் - பரிமேலழகர் உரை, 982 பழனியப்பா பிரதர்ஸ் (1994)

9. திருக்குறள் - பரிமேலழகர் உரை, 61 பழனியப்பா பிரதர்ஸ் (1994)

10. கு.வெ. பாலசுப்பிரமணியம் - புறநாநூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் அவுஸ். (2007)

11. புலியூர்கேசிகன் - ஔவையார் (தனிப்பாடல் திரட்டு) (மூலமும் உரையும்) மங்கை வெளியீடு, சென்னை – 600 018. 2010